08.01.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா. 8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமூண்டிஸ்வரி | | |
| க/பெ | அருள் | மதம் | |
| கிராமம் | கொசப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 40/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு அதே காவல் நிலையத்தில் பெண் காவலராக பணி செய்தேன். ஆஜர் எதிரி அனைவரையும் எங்கள் காவல் நிலையத்தில் பணி புரிந்த வகையில் எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன ஜெயவேல், அ.சா.2 அசாரியா ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 06.05.2014ந் தேதி காலை 8 மணி முதல் 14 மணி நேரம் வரை நிலைய அலுவலில் நியமிக்கப்பட்டு பணியில் இருந்தேன். காலையில் சமார் 8.15 மணியளவில் ஒரு நபர் காவல் நிலையத்திற்கு வந்து தன்னுடைய மணிபர்சை யாரோ திருடிவிட்டதாக சொன்னார். இரண்டாவது எதிரி பாலமுருகன் அப்போது அங்கிருந்து சென்று அந்த திருட்டு சம்மந்தமாக ஒரு நபரை அழைத்து வந்தார். அவர் அந்த இரண்டு நபர்களை திருட்டு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார். அப்படி விசாரித்துக்கொண்டிருந்த போது வேறு ஒரு நபர் வந்து பிளாட்பார்மில் டீ வியாபாரம் செய்பவர்கள் அடித்துக்கொண்டதாக சொன்னார். 1ம் எதிரி திருக்குமரன் அப்போது பிளாட்பார்மிற்கு சென்று அவர்களில் ஒருவரை அழைத்து வந்தார். ராஜன் எஸ்.ஐ. அப்போது வந்தார். அவர் அவர்களை விசாரித்துக்கொண்டிருந்தார். அப்போது ஸ்டேசனில் ஆய்வாளர் வாசுதேவன், சேகர் எஸ்.ஐ, அசோகன் எஸ்.ஐ, எழுத்தர்

புருஷோத்தமன் ஆகியோர் திருச்சிக்கு கிரைம் மீட்டிங்கிற்கு சென்றுள்ளதால் ஆய்வாளர் வந்தவுடன் இதை விசாரித்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். அன்று 14 மணிக்கு ஸ்ரீநாத் (ஏ5) என்பவர் என்னை எனது பாரா பணியிலிருந்து விடுவித்து அவர் அந்த பணியை ஏற்றுக்கொண்டார். நான் வீட்டிற்கு சென்று விட்டேன். இரவு எனக்கு 21 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை பிளாட்பார்ம் பணிக்கு நியமிக்கப்பட்டேன். 21 மணிக்கு நான் நிலையம் வந்து பீட் புக் மார்ச்சாகி பிளாட்பார்ம் சென்று விட்டேன். பிளாட்பார்மிலேயே இரவு முழுவதும் பணியிலிருந்தேன். ராஜன் எஸ்.ஐ. வந்து பணியை தணிக்கை செய்தார். ஆய்வாளர் வாசுதேவனும் வந்து நான் பணியிலிருப்பதை வந்து பார்த்தார். காலை 7 மணிக்கு பணி முடித்து காவல் நிலையம் வந்தேன் அப்போது மழை பெய்துக்கொண்டிருந்தது அதனால் உடனடியாக பீட் புக்கை பாரா வசம் ஒப்புவித்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். 7ந் தேதி மதியம் 14 மணிக்கு என்னையும், இளையராணி ராஜலட்சுமி என்பவரையும் மீண்டும் பிளாட்பார்ம் பணி போட்டு இருந்தார்கள். 14 மணிக்கு நாங்கள் காவல் நிலையம் வந்தபோது காவல் நிலையம் வெறிச்சோடி இருந்தது. அப்போது என்ன என்று நாங்கள் விசாரித்த போது ஜெயவேல் என்பவரை காவல் நிலையத்தில் விசாரித்தபோது அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனை அழைத்து செல்லும் போது அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டோம். அது சம்மந்தமாக விசாரணை செய்ய உயர் அதிகாரிகள் காவல் நிலையம் வருவதால் நாங்கள் உடனடியாக எங்கள் பணிக்கு புறப்பட்டு சென்றுவிட்டோம். அதன் பிறகு மறுநாள் 8ம் தேதி ஆய்வாளர் வாசுதேவன் காவலர்கள் திருக்குமரன், லோகேஸ்குமார், ஸ்ரீநாத் மற்றும் தலைமை காவலர் பாலமுருகன் ஆகியோர்களை தற்காலிக பணிநீக்கம் செய்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியவந்தது. இது சம்மந்தமாக விழுப்புரம் சிபி.சிஐடி ஆய்வாளர், வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பின் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்க மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.